1972 ஆகஸ்ட் 10]

திரு. அ. ஆறுமுகம்: தலைவரவர்களே, சேலம் மாவட்டத்தில் மேய்ச்சேரி என்ற இடம் செம்மறி ஆட்டிற்குப் பெயர் பெற்ற இடம். ஆகவே, சேலம் மாவட்டத்தில் ஆட்டுப்பண்ணை அமைப்பதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, அது பற்றிய விவரம் இல்லை. ஆனால் சேலத்திற்குப் பக்கத்தில் சின்ன சேலத்தில் ஆட்டுப்பண்ணை நடக்கிறது. மேலும் தேவைப்பட்டால் ஆட்டுப் பண்ணை வைத்து வளர்க்க முயற்சிக்கலாம்.

திரு. தொ. ப. சீனிவாசன்: தலைவரவர்களே, அமைச்சரவர்கள் 4 இடங்களில் ஆட்டுப்பண்ணைகள் அமைத்திருப்பதாகச் சொன்னார்கள். அது எந்தெந்த இடங்கள் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நான்கு இடத்தையும் சொன்னார்கள்.

திரு. தொ. ப. சீனிவாசன்: இந்த ஆட்டுப்பண்ணைகளை நன்றாக அமல் செய்வதற்கு மத்திய சர்க்கார் மானியம் அளிக்கிறதா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: இத்தகைய பண்ணைகள் அமைந்து அவை இப்பொழுது சரியாக இயங்குவதற்கு எல்லாவிதமான சீர்திருத்தங்களும் செய்யப்பட்டிருக்கிறது. கால்நடை வளர்ச்சிக் குழு பரிசீலனை செய்து சீர்திருத்தங்களை வழங்கியிருக்கிறது. அவைகள் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட இலாக்கா நடவடிக்கை எடுக்கிறது. அதே நோக்கில் மத்திய சர்க்கார் நம் நாட்டு ஆட்டு இனத்தின் தரத்தை உயர்த்த—நம்முடைய நாட்டிலுள்ள ஆடுகளின் தரம் அவ்வளவு நல்லதாக இல்லை என்பதால்—காரிடேல் என்னும் இன ஆடுகளைக் கொண்டு கலப்பு இனத்தை உண்டாக்கும் முயற்சிக்கு உதவுகிறது. அப்படிப்பட்ட இனத்தினால் மிகுந்த இறைச்சி கிடைக்கவும், கம்பளி கிடைக்கவும் பல ஆராய்ச்சிகள் இன்றைக்கு நடக்கின்றன.

தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டத்தின் கீழ் மருத்துவ மனைகள்

*36. வினா.—**திரு. சு. துரைசாமி:** மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1971-ம் ஆண்டு, ஏப்ரல் முதல் தேதியில் தொழிலாளர் அரசினர் ஈட்டுறுதித் திட்டத்தின்கீழ் உள்ளிருப்புச் சிகிச்சைக்காக உள்ள அரசு மருத்துவ மனைகள் எவை?

(இ) அவற்றின் மொத்த படுக்கைகள் எவ்வளவு?

[1972 ஆகஸ்ட் 10

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : (அ) இரண்டு மருத்துவமனைகள்.

(இ) 925 படுக்கைகள்.

திரு. சு. துரைசாமி : தலைவரவர்களே, நம்முடைய தமிழகத்திலே இரண்டே இரண்டு மருத்துவ மனைகள்தான் இருக்கின்றன. இன்னும் அதிகமாக்குவதற்கு முயற்சி எடுக்க வேண்டும். மேலும் படுக்கைகளின் எண்ணிக்கையை அதிகப் படுத்தவும் வாய்ப்பு ஏற்படுத்த வேண்டும். அதற்கு முயற்சி எடுக்க வேண்டும்.

(விடை இல்லை.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கேள்வியாக இல்லையே.

திரு. ஏ. சுப்பிரமணியம் : தலைவரவர்களே, கோவையிலேயிருக்கும் ஈ.எஸ்.ஐ. மருத்துவமனையில் 200 படுக்கைகள் போடுவதற்கான இடம் இருந்தும் அந்த இடம் காலியாக சும்மா கிடப்பதுடன் அதற்குப் போட்ட மூலதனமும் வீணாகிறது. எனவே, படுக்கைகளை அதிகப்படுத்துவதற்கு அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : தலைவரவர்களே, கனம் உறுப்பினர் அவர்களின் யோசனையை அரசு பரிசிலனை செய்யும்.

திரு. சு. துரைசாமி : தலைவரவர்களே, இங்கே இருக்கும் மருத்துவ மனைகள் குறைவு. இன்னும் தமிழ்நாட்டில் ஏராளமான தொழிலாளர்களுக்கு அமைக்கப் பட வேண்டும். அப்படித் திட்டமிடப்பட்டு பின்னால் கைவிடப்பட்டது. ஆகையால்தான் நான் தெரிவிக்கிறேன். எனவே இன்னும் அதிக மருத்துவமனைகளை அதிகரிக்கவும், படுக்கைகளை அதிகப்படுத்தவும் முயற்சியெடுக்குமா ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : தலைவரவர்களே, கனம் உறுப்பினரவர்கள் கேட்ட கேள்வியில், 1971-ம் ஆண்டு ஏப்ரல் முதல் தேதியில் என்று கேட்ட கேள்விக்கு இரண்டு மருத்துவமனைகள் என்று தெரிவித்தேன். ஏப்ரல் 13-ஆம் தேதி மதுரையில் மேலும் ஒரு மருத்துவமனை திறக்கப்பட்டிருக்கிறது. மேலும் பல மருத்துவமனைகளைத் திறப்பதற்கு நிதி வசதி ஏற்பட்ட உடனே பரிசீலனை செய்யும்.

திரு. இரா. இராமலிங்கம் : தலைவரவர்களே, தூத்துக்குடி பகுதியில் மருத்துவமனை கட்டுவதற்கு நில ஆர்ஜிதம் செய்து இரண்டு மூன்று ஆண்டுகள் ஆகின்றன என்று தெரிகிறது. இந்த மருத்துவமனை எப்பொழுது கட்டப்படும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : தலைவரவர்களே, நான் ஏற்கனவே தெரிவித்தபடி நிதிநிலையில் தக்க வசதி கிடைத்தவுடன் பரிசீலனை செய்து அந்த முயற்சி மேற்கொள்ளப்படும்.

1972 ஆகஸ்ட் 10]

திரு. எம். சுரேந்திரன் : சார், மேட்டூர் பகுதி மிகுந்த தொழிலாளர்கள் வாழும் பகுதி. அங்கே இதுபோன்ற மருத்துவமனை அமைப்பதற்கு நிலம்கூடப் பார்த்து ஏற்பாடுகள் செய்யப்பட்டு கைவிடப்பட்டிருக்கிறது. அது மீண்டும் ஆலோசிக்கப்படும் என்று ஒரு சந்தர்ப்பத்தில் அரசாங்கத்தில் கூறினார்கள். இப்பொழுதே அரசாங்கம் இந்தப் பிரச்னையை எடுத்து அதை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : கனம் அங்கத்தினர் அவர்களின் யோசனையையும் நினைவில் வைத்து ஆவன செய்யப்படும்.

* 37. வினா—**திரு. சு. துரைசாமி** : மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் நயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1971 ஏப்ரல் முதல் தேதியில் தொழிலாளர் அரசினர் ஈட்டுறுதி செய்தோரின் உள்ளிருப்பு சிகிச்சைக்காக உள்ள தனியார் மருத்துவ மனைகள் எவை ?

(இ) இவற்றிற்கு அரசு தரும் உதவித் தொகை எவ்வளவு ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : (அ) நான்கு.

(1) ராமலிங்கம் என்புருக்கி மருத்துவமனை, பெருந்துறை.

(2) ராஜாஜி என்புருக்கி மருத்துவமனை, திருச்சிராப்பள்ளி.

(3) ஸ்கட்டர் நினைவு மருத்துவமனை, ராணிப்பேட்டை.

(4) கிறிஸ்துவ மிஷன் மருத்துவமனை, மதுரை.

(இ) இவற்றிற்கு அரசு தரும் உதவித்தொகை பின்வருமாறு :

(1) ராமலிங்கம் என்புருக்கி மருத்துவமனை, பெருந்துறை—பிணியாளர் ஒருவருக்கு 1 நாளுக்கு ரூ. 6 தரப்படுகிறது.

(2) ராஜாஜி என்புருக்கி மருத்துவமனை, திருச்சிராப்பள்ளி—பிணியாளர் ஒருவருக்கு 1 மாதத்திற்கு ரூ. 180 தரப்படுகிறது.

(3) ஸ்கட்டர் நினைவு மருத்துவமனை, ராணிப்பேட்டை—பிணியாளர் ஒருவருக்கு 1 நாளுக்கு ரூ. 7 தரப்படுகிறது.

(4) கிறிஸ்துவ மிஷன் மருத்துவமனை, மதுரை—பிணியாளர் ஒருவருக்கு 1 நாளுக்கு ரூ. 7 தரப்படுகிறது.

திரு. சு. துரைசாமி : தலைவரவர்களே, 4 மருத்துவமனைகளுக்கும் கொடுக்கப்படும் உதவித் தொகையில் வேறுபாடு இருக்கிறது. இந்த வேறுபாட்டைப் போக்க அரசாங்கம் முயற்சியெடுக்குமா ? அங்கேயிருக்கும் தொழிலாளர்களுக்குப் போதிய வசதிகளைச் செய்து கொடுப்பதற்கு அரசாங்கம் முன் வருமா ?